2 1 ... 20..

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2014/2015

## (ஓகஸ்ட்- 2017)

## CR 1112 An Introduction to Major Indian Religious Traditions- Hinduism & Buddhism

நேரம் : 02 மணித்தியாலங்கள்.

பகுதி-1 இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி-11 இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

### பகுதி -1

1. அ) இந்து என்ற சொல் எவ்வாறு தோற்றம் பெற்றது என விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) இந்து மதத்தின் புனித நூல் யாது என்பதனைக் குறிப்பிட்டு அதனைத் தழுவித் தோன்றிய இதர நூல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   இ) இந்து சமயம் ஒரு சனாதன தர்மம் என்பதற்கு முன்வைக்கப்படும் நியாயங்களை சுருக்கமாக தருக. (10 புள்ளிகள்)

2. அ) இந்து மதத்தில் இன்றும் நிலைத்திருக்கும் 12 உபநிடதங்களின் பெயர்களைப் பட்டியற் படுத்து. (05 புள்ளிகள்)

   ஆ) உபநிடதங்களில் உரைக்கப்பட்டுள்ள இந்துமதத்தின் பிரதான தத்துவக் கருத்துக்களில் இறைவன், ஆத்மா பற்றி சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

   இ) பௌத்த சமயப் புனித நூல் எவ்வாறு அழைக்கப்படுகின்றது அது பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

3. அ) பௌத்த சமயம் உருவாக ஏதுவாக இருந்த காரணிகளைச் சுருக்கமாக தருக. (07 புள்ளிகள்)

   ஆ) கௌதம புத்தரின் வாழ்வு பற்றி சுருக்கமாக குறிப்பு எழுதுக. (10 புள்ளிகள்)

   இ) பௌத்தம் கூறும் கணவாதம் அல்லது பிரதித்யசமுத்பாத என்பதனை விபரிக்குக. (08 புள்ளிகள்)

### பகுதி 11

4. பௌத்த சமயம் கூறும் நான்கு பேருண்மைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் துக்கநிவாரணம் பற்றி விளக்குக. (25 புள்ளிகள்

5. இந்துமதத்தில் கூறப்படும் ஆத்மக் கோட்பாட்டிற்கும் பௌத்தம் கூறும் அனாத்ம வாதக் கோட்பாட்டிற்குமிடையேயான வேறுபாட்டை தெளிவாக்குக. (25 புள்ளிகள்)

6. இந்துமதத்தில் இறைவன் ஏற்றுக் கொள்ளப்படும் விதத்தையும், பௌத்தம் இறை மறுப்பை ஏற்றுக் கொள்வதையும் நீர் எவ்வாறு விளங்கியுள்ளீர் என்பதனை விளக்குக. (25 புள்ளிகள்)